துறையைப் பொறுத்தவரையில் மானியம் சேங்ஷன் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். மானியம் சாங்ஷன் செய்த பிறகு, கடன் கொடுக்கப்பட்டால் மின்சாரம் வழங்குவதற்கு, முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. வ. சத்தியமூர்த்தி, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. வ. சத்தியமூர்த்தி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பாசனத்துறை குறித்து 1985-86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழு அளித்த முதலாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன். அளிக்கப்பட்ட அறிக்கையில், பக்கம் 12, வரிசை எண். 9, பரிந்துரை எண் 9, பத்தி 24 நீக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்து அமைகிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் பற்றிய பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த எட்டாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தேழாவது அறிக்கையை அளிக்கிறேன்.